# ஏழை எளிய மக்களுக்கு அன்னதானம் அளித்து அரும்பசி போக்கும் மாண்புமிகு தமிழக முதல்வர்

"உண்டி கொடுத்தோர், உயிர் கொடுத்தார்" என்றும், "பசியால் பரிதவிக்கும் ஜீவனுக்கு உணவிடுவோர் பரம் பொருளுக்கே உணவிட்டவர் ஆவார்" என்றும் அன்னதானத்தின் சிறப்பை குறிப்பிடுவர் நம் முன்னோர்கள்.



மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு.மு.க.ஸ்டாலின் அவர்கள் இன்று (11.9.2021) சென்னை, திருவான்மியூர் அருள்மிகு மருந்தீஸ்வரர் திருக்கோயில் திருமண மண்டபத்தில் ஒரு கால பூஜைத்திட்டத்தின் கீழ் உள்ள 12,959 திருக்கோயில்களில் பணிபுரியும் அர்ச்சகர்கள் / பட்டாச்சாரியார்கள் / பூசாரிகளுக்கு மாத ஊக்கத்தொகை வழங்கும் திட்டத்தை தொடங்கி வைக்கும் அடையாளமாக 25 அர்ச்சகர்கள்/ பட்டாச்சாரியார்கள் / பூசாரிகளுக்கு ஊக்கத் தொகையினை வழங்கினார். இந்நிகழ்ச்சியில், மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் திரு. எ.வ. வேலு, மாண்புமிகு மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் திரு.மா. சுப்பிரமணியன், மாண்புமிகு இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர் திரு.பி.கே. சேகர்பாபு, நாடாளுமன்ற உறுப்பினர் திருமதி தமிழச்சி தங்கபாண்டியன், சட்டமன்ற உறுப்பினர் திரு. ஜே.எம்.எச். ஹசன் மௌலானா, சுற்றுலா, பண்பாடு மற்றும் அறநிலையங்கள் துறை முதன்மைச் செயலாளர் டாக்டர் பி. சந்தர மோகன், இ.ஆ.ப., இந்துசமய அறநிலையத் துறை ஆணையர் திரு. ஜெ. குமரகுருபரன், இ.ஆ.ப., திருவாவடுதுறை ஆதீனம் ஸ்ரீமத் திருச்சிற்றம்பல தம்பிரான் சுவாமிகள், மயிலம் பொம்மபுர ஆதீனம் ஸ்ரீலஸ்ரீ சிவஞான பாலய சுவாமிகள், இராமநாதபுரம் சமஸ்தானத்தின் பரம்பரை தர்மகர்த்தா ராணி திருமதி ராஜராஜேஸ்வரி, தஞ்சாவூர் அரண்மனை தேவஸ்தானம் பரம்பரை அறங்காவலர் திரு. பாபாஜி ராஜா போன்ஸ்லே மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் இந்து சமய அறநிலையத் துறையின் சார்பில் பல்வேறு நலத் திட்டங்களை அறிமுகப்படுத்தி செயல்படுத்தி வருகிறார்கள். அதனடிப்படையில் திருக்கோவில்களில் பணிபுரியும் அர்ச்சகர்கள், பட்டாச்சாரியார்கள், பூசாரிகள் மாத வருவாயின்றிப் பணியாற்றி வந்தது தெரியவந்தது. அதன்படி, கடந்த 04.09.2021 அன்று இந்து சமய அறநிலையத் துறையின் மானியக் கோரிக்கையின்போது ஒருகாலப் பூஜைத் திட்டத்தின்கீழ் உள்ள 12,959 திருக்கோவில்களில் பணிபுரியும் அர்ச்சகர்களுக்கு மாத ஊக்கத்தொகையாக ரூ.1,000 வழங்கப்படும் என்ற அறிவிப்பு வெளியிடப்பட்டது முதற்கட்டமாக மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் 11.09.2021 அன்று சென்னை, திருவான்மியூர் அருள்மிகு மருந்தீஸ்வரர் திருக்கோவில் திருமண மண்டபத்தில் ஒருகாலப் பூஜைத் திட்டத்தின்கீழ் உள்ள 12,959 திருக்கோவில்களில் பணிபுரியும் அர்ச்சகர்கள், பட்டாச்சாரியார்கள், பூசாரிகளுக்கு மாத ஊக்கத்தொகை வழங்கும் திட்டத்தைத் தொடங்கி வைத்தார்கள்.

மேலும், கொரோனா பெருந்தொற்றுக் காலத்தில் திருக்கோவில்களில் பணிபுரியும் அர்ச்சகர்கள் சந்தித்தப் பொருளாதார நெருக்கடியைக்

கருத்தில்கொண்டு அதில் இருந்து அவர்களையும், அவர்கள் குடும்பத்தினரையும் மீட்டெடுக்கும் பொருட்டுத் துறையின் நிருவாகக் கட்டுப்பாட்டின்கீழ் உள்ள திருக்கோவில்களில் நிலையான மாத வருவாயின்றிப் பணியாற்றி வந்த அர்ச்சகர்கள், பட்டாச்சாரியார்கள், பூசாரிகளுக்கு அரிசி மற்றும் மளிகைப் பொருள்களுடன் ரூ.4,000 உதவித்தொகை வழங்கப்பட்டது. இதன்மூலம், சுமார் 11,065 திருக்கோவில் அர்ச்சகர்கள் மற்றும் பணியாளர்கள் பயன்பெற்றுள்ளனர். மேலும், அர்ச்சகர்கள் மற்றும் திருக்கோவில் பணியாளர்களுக்கான குடியிருப்புகள் 6 இடங்களில் ரூ.21.40 கோடி மதிப்பீட்டில் கட்டித்தரப்படும் என அறிவிக்கப்பட்டுள்ளதும் குறிப்பிடத்தக்கது.

மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள் திருச்செந்தூர், சமயபுரம், திருத்தணி கோவில்களில் முப்பொழுதும் அன்னதான வழங்கும் திட்டத்தை தலைமைச் செயலகத்தில் இருந்து காணொலி காட்சி வாயிலாக (16.09.2021)அன்று தொடங்கி வைத்தார்கள். முப்பொழுதும் அன்னதான திட்டம் மூலம் காலை கோவில் நடை திறந்ததும் முதல் இரவு கோவில் நடை அடைக்கும் வரை அன்னதானம் வழங்கப்படுகிறது. தினமும் 3000 பேருக்கு உணவு வழங்கவும் திருவிழா நாட்களில் 5000 பேருக்கு அன்னதானம் வழங்கவும் திட்டமிடப்பட்டுள்ளது காலை 8 மணி முதல் இரவு 10 மணி வரை அன்னதானம் வழங்கப்படுகிறது இதன் மூலம் தினமும் 7800 பக்தர்கள் பயன் பெறுவார்கள் எனவும் ஒரு மாதத்திற்கு 9.45 கோடி செலவு ஆகிறது எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இத்திட்டம் குறித்து மாவட்ட ஆட்சித்தலைவர் திரு. தினேஷ் பொன்ராஜ் ஆலிவர் இ.ஆ.ப., அவர்கள் கூறியதாவது:-



கோவிலுக்கு வரும் பக்தர்கள் மதியம் கோவிலில் பந்தியில் இலை போட்டு சாப்பிட்டு வந்தனர் கடந்த ஆண்டு மார்ச் மாதம் வரை ஊரடங்கு அமல்படுத்தப்பட்ட பிறகு கோவில்கள் மூடப்பட்டன அதன்பிறகு ஊரடங்கு தளர்வு தொடர்ந்து கோவில்கள் வழிபாட்டுக்காக திறக்கப்பட்டன ஆனாலும் இலை போட்டு சாப்பிடும் அன்னதானம் அனுமதிக்கப்படவில்லை அதற்கு பதிலாக கோவிலுக்கு வரும் பக்தர்களுக்கு பார்சல் மூலம் அன்னதானம் வழங்கப்பட்டு வந்தன இந்த நிலையில் பழனி முருகன் கோவில், ஸ்ரீரங்கம் ரங்கநாதர் கோவில் ஆகிய கோவில்களில் முதல்முறையாக நாள் முழுவதும் அன்னதானம் வழங்கும் திட்டம்

தொடங்கப்பட்டது அதன் தொடர்ச்சியாக திருச்செந்தூர் சுப்பிரமணிய சுவாமி கோவில் சமயபுரம் மாரியம்மன் கோவில் திருத்தணி முருகன் கோவில் ஆகிய மூன்று கோவில்களும் நாள் முழுவதும் அன்னதானம் வழங்கும் திட்டத்தை தமிழக அரசு விரிவுபடுத்திவுள்ளது.

தஞ்சாவூர் மாவட்டத்தில் இந்து சமய அறநிலையத் துறையின் சார்பில் 26 கோவில்களில் மீண்டும் அன்னதான திட்டம் செயல்படுத்தப்படுகிறது தமிழகத்தில் உள்ள அனைத்து கோவில்களிலும் பொதுமக்களுக்கு அன்னதானம் வழங்கும் திட்டம் கடந்த ஆண்டு கொரோனா தொற்றுநோயால் நிறுத்தப்பட்டிருந்தது இப்போது கொரோனா தொற்றுநோய் குறைந்த நிலையில் மீண்டும் பொதுமக்களுக்கு கோவில்களில் அன்னதானம் வழங்கும் திட்டம் தொடங்கப்பட்டுள்ளது தஞ்சாவூர் மாவட்டத்தில் இந்து சமய அறநிலையத் துறையின் சார்பில் கட்டுப்பாட்டில் வரும் தஞ்சாவூர் புன்னைநல்லூர் மாரியம்மன் கோவில், கரந்தை கோடியம்மன் கோவில், கொங்கணேஸ்வரர் கோவில், ராஜகோபாலசுவாமி கோவில், பாபநாசம் வட்டம் திருக்கருகாவூர் முல்லை வன நாத சுவாமி கோவில், பேராவூரணி நீலகண்ட பிள்ளையார் கோவில், கரம்பயம் முத்துமாரியம்மன் கோவில், பருத்தியப்பர் கோவில், பாஸ்கரேஸ்வரர் கோவில், திங்களூர் (சந்திரன் தலம்) கைலாசநாதர் கோவில், பரக்கலகோட்டை பொது ஆவுடையார் கோவில், திருக்காட்டுப்பள்ளி அக்னீஸ்வரர் கோவில், திட்டை வசிஷ்டேஸ்வரர் கோவில், சூரக்கோட்டை பரமநாதன் சுவாமி கோவில், பாபநாசம் 108 சிவாலயம் ராமலிங்க சுவாமி கோவில், பட்டுக்கோட்டை நாடியம்மன் கோவில், வெட்டுவாகோட்டை செல்லியம்மன் கோவில், வீரசிங்கம்பேட்டை மாரியம்மன் கோவில், வல்லம் ஏகவுரி அம்மன் கோவில், கண்டியூர் பிரம்மசிரகண்டீஸ்வர் கோவில், தஞ்சை மேலவீதி பங்காரு காமாட்சி அம்மன் கோவில், பேராவூரணி அத்தாளூர் வீரமாகாளியம்மன் கோவில், பட்டுக்கோட்டை பாலத்தளி அருள்மிகு துர்க்கை மாரியம்மன் கோவில், துவரங்குறிச்சி மாரியம்மன் கோவில், திருவையாறு கோவிலடி அப்பாலரெங்கநாதசுவாமி கோவில், பாபநாசம் வட்டம் காத்தாயி அம்மன் கோவில், திருவையாறு பஞ்சநதீஸ்வரர் கோவில் உள்ளிட்ட 26 கோவில்களில் அன்னதான திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

மேலும் 10 திருக்கோயில்களில் 16.5.2021 முதல் 22.10.2021 வரை கொரோனா பெருந்தொற்று காலத்தில் கொரோனா தோற்றவர்களின் உதவியாளர்களுக்கு மருத்துவமனையில் 99700 நபர்களுக்கு உணவு பெட்டலம் வழங்கப்பட்டது. 11 திருக்கோயிலில் 23.06.2021 முதல் 19.06.2021வரை வருகை தரும் சேவார்த்திகளுக்கு 60030 நபர்களுக்கு உணவு பொட்டலம் வழங்கப்பட்டது. 22 திருக்கோயில்களில் வெள்ளி சனி மற்றும் ஞாயிறு கிழமைகளில் 20.09.2021 முதல் 29.10.2021 வரை உணவுப் பொட்டலங்களும் இதர நாட்களில் வழக்கமான முறையில் நிலையில் 44742 அவர்களுக்கு உணவு வழங்கப்பட்டது. 17

மாதங்களுக்குப் பிறகு கோவிலில் இலைபோட்டு அன்னதானம் வழங்கப்பட்டதால் பக்தர்கள் மகிழ்ச்சி அடைந்தனர். இனி தினந்தோறும் அன்னதானம் வழங்கும் கோவில்களில் அன்னதானம் கூடங்களில் தனிநபர்களை இடைவெளியுடன் பக்தர்களுக்கு அன்னதானம் இலையில் பரிமாறப்பட்டு வரும் என்றும் மாவட்ட ஆட்சித்தலைவர் திரு. தினேஷ் பொன்ராஜ் ஆலிவர் இ.ஆ.ப., அவர்கள் கூறினார்.

இத்திட்டம் குறித்து தஞ்சாவூர் மாரியம்மன் கோயில் தெருவில் வசித்து வரும் திருமதி. விஜயலட்சுமி கூறியதாவது:-



**திருமதி.விஜயலெட்சுமி**
**தஞ்சாவூர்.**

என் பேரு விஜயலட்சுமி. நான் தஞ்சாவூர் மாரியம்மன் கோவில் தெருவில் வசித்து வருகிறேன். நான் தினமும் கூலி வேலை செய்து அதிலிருந்து வரும்

வருமானத்தில் இரண்டு வேளை மட்டுமே சாப்பிட்டு வந்தேன். முத்துமாரியம்மன் கோயிலில் அன்னதானம் வழங்கும் திட்டத்தின் மூலமாக நான் இப்போது மூன்று வேளையும் சாப்பிடுறேன். என்ன மாதிரி ஏழை எளிய மக்களுக்கு இந்த திட்டம் ரொம்ப உதவியா இருக்கு. மாண்புமிகு முதலமைச்சர் ஐயா அவர்களுக்கு ஏழை மக்களின் சார்பாக எனது நன்றியை தெரிவித்து கொள்கிறேன்.

**திருமதி.க.பிரேமலதா,**
**செய்திமக்கள் தொடர்பு அலுவலர்,**
**தஞ்சாவூர் மாவட்டம்.**